**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 09.12.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 26°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 14°செ முதல் 19°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமானது முதல் கன மழை காணப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (09.12.2015 முதல் 13.12.2015)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிகவும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 85 முதல் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ சம்பா நடவு செய்யப்பட்ட நெற் பயிருக்கு மழை இல்லாத நேரங்களில் பூக்கும் தருணத்தில் 0.5 சதம் ஜிங்சல்பேட் மற்றும் 1 சதம் யூரியாவும், பால் பிடிக்கும் தருணத்தில் 2 சதம் டி.ஏ.பி மற்றும் 1 சதம் பொட்டாஸியம் குளோரைடும் தெளிக்கவும்.
- ✓ அதிக காற்றின் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிரில் குலைநோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து தகுந்த பயிர் பாதுகாப்பு செய்யவும்.
- ✓ அதிக மண் ஈரம் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக மஞ்சளில் இலைப்புள்ளி நோய் அதிகமாக தென்படும். இதனை கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிம் (Carbendazim @ 500g) மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலை திராட்சையில் அடிச்சாம்பல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதை கண்காணித்து 1 சதம் போர்டோ கலவை அல்லது 0.25 சதம் காப்பர் பூஞ்சாணக்கொல்லி தெளிக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் வேகமான காற்றின் காரணமாக ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மற்றும் கரும்பு பயிர்களுக்கு சாயாமல் முட்டு கொடுக்கவும்.
- ✓ கோழிப்பண்ணைகளில் அதிவேகக்காற்றினால் ஏற்படும் பாதிப்பினை தவிர்க்க கோழிக் கூடாரங்களில் ஈரச்சாக்கினை தொங்கவிடவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன்

காணப்படும். மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை $26^0$செ $28^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 85 முதல் 95 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 கி.மீ முதல் 13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ ***மழை நீர் சூழந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்ப்படுத்த நீரினை வடித்து வேர்ப் பகுதிக்கு காற்றோட்ட ம் கிடைக்கச் செய்யவும்.***
- ✓ ***அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை பொழிய வாயப்புள்ளதால் மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களில் சம்பா பயிரில் மேலுரம் இடுவதை தவிர்க்கவும். மேலும், தாளடி பயிரில் நடவு செய்யும் பொழுது அடியுரம் இடுவதை தவிர்த்து மழை நின்ற பின் நீரை வடித்து விட்டு சீராகத் தூவவும்.***
- ✓ *சம்பா நெற்பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் இதனை நிவர்த்தி செய்ய ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா+ ஜிப்சம் 18 கிலோ+ வேப்பம்புண்ணாக்கு 4 கிலோ என்றளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து தண்ணீர் வடிந்தவுடன் வயலில் இடவும்.*
- ✓ *தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக்கரைசலை நோய் அறிகுறி தென்பட்டவுடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும். (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்.) அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.*

**,3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $23^0$செ முதல் $25^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 95 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 20 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ ***வரும் தினங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல், இறவை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும். மருந்து தெளித்தல் மற்றும் மேலுரமிடுதலை தவிர்க்கவும்.***
- ✓ ***வரும் தினங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் மழை உள்ள சமயங்களில் கால்நடைகளை மேயச்சலுக்கு அனுமதிப்பதை தவிர்த்து அவற்றை கொட்டில்களில் பாதுகாப்பாக பராமரிக்கவும்.***
- ✓ ***வரும் தினங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்த்து போதிய வடிகால் வசதி செய்யவும். முட்டு***

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் இலேசானது முதல் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 82 முதல் 95 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ முதல் 13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ **வரும் தினங்களில் ஆங்காங்கே மழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மனாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும்.**
- ✓ **அடுத்த மூன்று நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தங்களுடைய நெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதையும் மற்றும் உரமிடுவதையும் தள்ளிப் போட வேண்டும்.**
- ✓ நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவேளியில் 2-3 முறை (**Mangozeb**)மேன்கோசேப் 2 கிராம், ஒரு லிட்டர் தண்ணரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ நெற்பயிரில் இலைச்சிலந்தியின் தாக்குதல் தென்பட்டால் இதைக்கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு (**Dichopol**) டைக்கோபால் 500 மில்லி அல்லது (**Wettable sulphur**) நனையும் கந்தகத்தூள் 400 மில்லி என்றளவில் 400 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ நெற் பயிரில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்பட்டுகிறது. இதைக்கட்டுப்படுத்த (**Profenophos**)புரோபனோபாஸ் 50 ஈ.சி என்ற மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி என்றளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ பருத்தியில் இலைப்பழுப்புநோயைக் கட்டுபடுத்த ஒரு ஏக்கருக்கு (**Sulphate+Tetracycline mixture**
- ✓ **100g+Copper Oxychloride**)சல்பேட் + டெட்ராசைக்லின் கலவையை 100 கிராம் + காப்பர் ஆக்ஸி குளோரைடு 125 கிராம் கலந்து தெளிக்கவும். மேலும் இரண்டு அல்லது மூன்று முறை 10 நாள் இடைவெளியில் தெளிக்கவும்.
- ✓ **தொடர்ந்து வயல்களில் தண்ணீர் தேங்குவதால் கரும்பில் இரும்பு சத்து பற்றாக்குறை காணப்படும். ஆகவே இரும்பு சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 250 கிராம் (Ferous sulphate) பெரஸ் சல்பேட் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.**
- ✓ கரும்பில் துரு நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ((**Mangozeb**) மேன்கோசேப் 2கி. தெளிக்க வேண்டும்.
- ✓ மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோயைக்கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு (**Metalaxyl+Mancozeb@100g/ha**) மெட்டலாக்சைல்+ மேன்கோசெப் @ 100 கிராம் ஆகியவற்றை விதைத்த 20 ம் நாள் தெளிக்கவும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும்

மாலை நேர காற்றின் ஈரப்பதம் 85 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது

**வேளாண் அறிவுரை.**

- ✓ மாவட்டத்தில் அடுத்த 5 நாட்களுக்கு இலேசானது முதல் மிதமானது மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ பயிர்களில் இலைப்பேண் தென்பட்டால் (**Dimethoate**) டைமீதோயேட் 1 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ தேயிலையில் கொப்புள நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு (**Proboganazole**) ப்ரோபோகனசோல் @ 50 மில்லி + (**Copper oxycholoride**) காப்பர் ஆக்ஸி குளோரைடு 84 கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ வரும் வாரத்தில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் டீ தோட்டத்தில் மண்ணின் அமிலத்தன்மையை சமபடுத்த (**Dolamite**) டோலமைட் இடவேண்டும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 83 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 2 கி.மீ முதல் 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வடகிழக்கு பருவமழையின் தாக்கம் வடமாவட்டங்களில் குறைந்தும், தென்மாவட்டங்களில் அதிகரித்தும் காணப்படும் சூழ்நிலை நிலவுகிறது. தென் தமிழக கடற்கரையை ஒட்டிய கடல் பகுதியில் தோன்றியுள்ள குறைந்த காற்று அழுத்தத் தாழ்வுநிலை காரணமாக தென் மற்றும் தென்கிழக்கு தமிழக மாவட்டங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது, ஆயினும். நாமக்கல் மாவட்டத்தில் குறைந்த வெப்ப அளவு மட்டுமே நிலவும் என்பதால் கோழிகளில் தீவன எடுப்பு உயரும் வாய்ப்புள்ளது. அதிக எரிசக்தி. சரியான புரதம், அமினோ அமிலங்கள் மற்றும் ஈரத்தன்மையால் ஏற்படும் பூஞ்சையைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் கொண்ட தீவனம் தயாரித்து. உடனுக்குடன் பயன்படுத்துவதால் முட்டை உற்பத்தியை தக்க வைத்துக்கொள்ளலாம்,
- ✓ ,தற்போது பெய்த மழை மற்றும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக நெல்லில் **பாக்டீரியா இலைகருகல்** மற்றும் **குலைநோய்** வர அதிக வாய்ப்பு இருக்கிறது, இதனால் இலைகளின் ஓரங்களில் கருகியும் மற்றும் இலையில் கண் வடிவ அறிகுறியும் காணப்படும், அப்படி இருந்தால் (**Pseudomonas fluorescens**) சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ் 2 கிராம்/லிட்டர் மற்றும் ( **Tricho derma viride**) டிரைகோ டெர்மா விரிடி 2 கிராம்/லிட்டர் என்ற அளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இப்பாதிப்பானது பொருளாதார சேதநிலை தாண்டினால் பாக்டீரியா மைசின் 6 கிராம்/ஏக்கர் மற்றும் ((**Copper oxycholoride** )காப்பர்ஆக்ஸி குளோரைடு 2 கிராம்/லிட்டர் என்ற அளவில் தண்ணீரில் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்,

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 29°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 85 முதல் 96 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 25 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ காய்ந்த, நோய் பூசாணம் இல்லாத தீவனங்களை கோழிகளுக்கு கொடுக்கவும்..
- ✓ வேம்பு மற்றும் நொச்சி இலைகளை கொண்டு புகை ஏற்படுத்தி நோய் கிருமிகளை பரப்பும் பூச்சிகளை விரட்டவும்.
- ✓ பயிர்களுக்கு உரங்கள் அளிக்க வேண்டாம்.
- ✓ நெற்பயிர் மற்றும் பிற பயிர்களில் உள்ள அதிகமான நீரை வெளியேற்ற வேண்டும்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை $29^0$செ முதல் $30^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $22^0$செ முதல் $23^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 90 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 17 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழைக் கன்றுகள் மழை நீரினால் சேதம் ஏற்படுவதை தடுக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் 59 மி.மீ அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் இளம் பருவம், காய்ப்பதற்கு முன் மற்றும் காய்க்கும் பருவத்திலுள்ள தென்னை மரங்களுக்கு உரமிடுதலை தவிர்க்கவும்.
- ✓ இரப்பரில் புது துளிர் மற்றும் பூக்கும் பருவத்தில் பாலித்தீன் ரைன்கார்ட் -ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களிலும் பால் வெட்டலாம்.
- ✓ மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட மிளகினை உலர்வான இடங்களில் சேமிக்கவும்.
- ✓ **குண்டு மல்லி பூவில் இடை பருவத்தில் மழை நீரால் பயிருக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க வடிகால் வசதி செய்யவும்.**

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**

**கோவை - 3**